# கேடில் விழுச்செல்வம் கல்வி

**K. Vimala**
*C. Kumar, G. S. Store Dudh line*
*Shadipur (Post) Andaman and Nicobar Islands*

மலர்: 10
சிறப்பிதழ்: 1
மாதம்: செப்டம்பர்
வருடம்: 2022
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5787

## முன்னுரை

பதினாறு வகைச் செல்வங்களில் தலையாய செல்வம் கல்வியே. கல்வி என்பது வெறும் புத்தகத்தைப் படித்து விட்டுப் பெறும் அறிவு அல்ல. படிப்பின் துணைகொண்டு வாழ்க்கையில் தொழில் மூலமாகவும், நமைச் சுற்றி வாழ்கின்ற உறவுகளிடமும், உயிரினங்களிலிருந்தும் நாம் கற்றுத் தெரிந்து தெளிந்துநடைமுறையில் நடைப்படுத்தி வாழ வேண்டும்.

உலகில் உள்ள ஆயிரக்கணக்கான உயிரினங்களுள் மனித இனமேதலை சிறந்தது. ஏனெனில் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆய்ந்தறியும் பகுத்தறிவு மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. அத்தகைய அறிவின் வளர்ச்சி அடிப்படையாவது கல்வி ஆகும். அதனைத் தான் வள்ளுவர்,

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு (396)**

என்று கூறினார். அறிவை வளர்ப்பதற்குத் துணைபுரியும் கல்வியே கேடில்லாத விருமிய செல்வமாகும்.

பட்டங்கள் ஆள்வதற்கும் சட்டங்கள் செய்வதற்கும் ஆண், பெண் வேறுபாடின்றிகட்டாயம் படிக்கவேண்டும் என்றார் பாரதியார்.

## தாய்மொழி வழிக்கல்வி

“யாதும் ஊரேயாவரும் கேளீர்” - என்று கூறியகணியன் பூங்குன்றனார் இன்றுஉலகஅறிஞர்கள் போன்றும் வகையில் தாய்மொழிக் கல்வியை சிறப்படையச் செய்துள்ளார். குழந்தையின் உடல் வளர்ச்சிகுத் தாய்ப்பால் எப்படியோஅப்படிமனிதனின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழி இன்றியமையாதுஎன்றுநம் நாட்டுத் தந்தைகாந்தியடிகளும் கூறியுள்ளார். அவர் நமதுவரலாற்றைத் தம் தாய்மொழியில் - கூர்ஜரகத்தில் எழுதிக்காட்டினார்.

கவி மன்னராகியர வீந்திரநாதர், கீதாஞ்சலி என்னும் உலகம் போற்றும் ஒரு நூலை தந்தாய் மொழியாகிய வஸ்கத்தில் இயற்றினார்.

தொழிற்கல்வி - மனிதன் தேவைகளுக்கான பொருள்களைப் பிறரிடமிருந்து எதிர்பார்த் தேவாழுகின்றோம் இதற்குக் காரணம் நூல் கல்விக்கு முதலிடம் தந்துவந்ததே ஆகும். “ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது” - என்ற பழமொழி

நமது வாழ்க்கையில் இன்று உண்மையாய் இருப்பதைக் காண்கிறோம். இன்றைய தேவை தொழிற்கல்வி என்பதை "ஏட்டுக் கல்வி மட்டும் கல்வியாகாது" தொழிற்கல்வி முதலியவையும் கல்வியின் பாற்பட் டனவே என்று திரு.வி.கல்யாணசுந்தரனார். கூறியதைநாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு சிற்பி ஓவிங்களில் வடித்திருப்பதை உணர ஓவியங்களை ஊன்றி நோக்குங்கள் நந்தமிழக் காவியங்களும், ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் ஓம்புவதை உணர்வீர்கள் - திரு.வி.க

இன்று உலகம் தொழில்மயமாகக் காட்சியளிப்பதால் இன்றைய கல்வித் திட்டத்தில் மாணவர்களுக்குப் பல்வகைத் தொழில் பயிற்சிகளை அளிப்பதற்கு திறமையான பயிற்சியாளர்கள் வேண்டும். இதனால் மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கை ஏற்படும் தொழில்துறைகள் வளர்ந்து உற்பத்தி பெருகும் நமது தேவைகள் நிறைவு செய்யப்படும்.

**கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**
**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்**

என்று பாடினார் நாமக்கல் கவிஞர் நமக்குத் தேவையான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கற்றோமானால் அத்தொழிலில் நாம் நல்லதிறமைபெறுவோம். இதன் மூலமாக கவலையின்றி வாழலாம். நாடும் நலம் பெறும்.

### உலகப் பொதுமை

***யாதானும் நாடாமல் ஊரமால் என்னொருவன்***
***சாந்தனையுங் கல்லாத வாறு***

***397***

கற்றவனுக்கு எந்தநாடும் எந்த ஊரும் சொந்தமாகும். அவ்வாறிக்க ஒருவன் கற்றுக் கொள்ளாமல் இருப்பது ஏன்? என்று கேட்கிறார் வள்ளுவர்.

இந்நூல் ஒரு குறிப்பிட்ட நாட்டாருக்கோ, ஒரு மொழி இனத்தவருக்கோ ஒரு மதத்தவருக்கோ உரியமுறையில் இயற்றப் படாமல் மனித இனம் முழுமைக்கும் பொதுவான முறையில் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் உலகமக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் பொதுத்தன்மை கொண்ட ஒரு நூல் அமைவதென்பது அரிது. இவ்வரிதான சிறப்பைத் திருக்குறள் பெற்றிருக்கிறது.

### குறளின் எழுத்துக்கள்

1. அன்பின் வழியது உயிர்நிலை என்று கூறிய இந்நூல்உயிருக்குத்துணையாகும் ஒழுக்கத்தைப் "பரிந்தோம்பிக் காக்க" என்று கட்டளையிடுகிறது.
2. கற்றவரேமனிதராவார் கல்லாதவர் விலங்காவார் என்று கூறுவதன் மூலம் கட்டாயக் கல்வியை வலியுறுத்துகின்றது.
3. இன்று இந்தியா முழுமைக்கும் வேண்டப்படுகின்ற மதுவிலக்குத் திட்டத்தை "கள்ளுண்ணாமை" என்ற அதிகாரத்தில் விளக்கிக் காட்டுகிறது.
4. செல்வத்தைப் பழுத்தமரத்திற்கும், மருந்துமரத்திற்கும் ஊருணிக்கும் ஒப்பாகக் கூறிப் பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்துகிறது.
5. உழைப்பின் பெருமையை

   **"தெய்வத்தானாகா தெனினும் முயற்சிகள் மெய்வருத்தக் கூலிதரும்"**

என்ற குறளின் கருத்து சட்டமாக்கப்பட்ட வேண்டிய கருத்துக்கள் !

### கல்வியின் பயன்

கல்வியை மதிப்பெண் பெறவும், பணம் சம்பாதிக்கவும் பந்தயத்தில் விட்ட குதிரைப் போல் ஓடுகின்றோம். அது அல்ல கல்வியின் பயன் கற்ற கல்வியானது தான் யார் என்று உணர்ந்து உதவிசெய்து வாழ்வித்து வாழ வேண்டும்.

முல்லைக் கொடிபடரத் தேர் தந்த பாரியின் செயலும் மயிலுக்குப் போர்வை தந்த போகனின் செயலும், அறியாமையால் செய்யப்பட்டவையல்ல. அச்செயல்

*அவர்களின் ஈகை உணர்வின் காரணமாகச் செய்யப்பட்டவையாகும்.*

*அன்பு, ஈகை, இரக்கம், கருணை, அரவணைப்பு போன்ற பண்புகள் பிறர் துன்பத்தை பார்த்து உணர்தல் வேண்டும்.*

*"காக்கை குருவி எங்கள் சாதி - என்பார் பாரதி அதுபோல "தனியொருவனுக்கு உணவில்லை" என்றால் ஜகத்திணை அழிப்போம்.*

### கல்வியின் அவசியம்

*கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று அறிவியற் கல்வி, சமூகவிற்கல்வி, அழகியல் கல்வி, அனுபவக் கல்வி, உடற்கல்வி, மனிதநேயக்கல்வி ஆகியவை சமூகத்திற்கு அவசியமானவை*

*முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் APJ அப்துல்கலாம் போன்ற உயர்ந்த மனிதன் முன் உதாரணமாக வாழ்ந்துகாட்டி சமூகத்தின் நிலையை உயர்த்திக்கொண்டு விண்ணில் நிலைநிறுத்தியது கல்வியே*

1. *கல்வி என்பது உடல் மற்றும் மன வளர்ச்சியின் அறிவு நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடைய வளர்ச்சிக்கு உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும்.*
2. *இன்றைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும் சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது.*
3. *கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம்*

**"வயலில் களை பறிக்கும் கைகள் கொண்டே**
**பலகலை வடிப்போம் கல்வி கொண்டே**
**கல்விகற்றால் வாழ்க்கை உயரும்**
**கற்றபடி வாழ்ந்தால் பலர் கனவுபலிக்கும்"**

### பழமொழி

*"கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று அடக்கம், ஒழுங்கு, அறம், நீதி இவற்றின் முன்மாதிரியாகும் - எட்மண்ட்பரக் உலகியல் மற்றும் அருளியல் கல்விபெற திருநாவுக்கரசப் பெருமான் 4-ஆம் திருமுறையில்*

**சொற்றுணை வேதியன் சோதிவானவன்**
**பெற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயவே**

*மனதுக்கு இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்கவல்ல முறையில் பழம்பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன.*